Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

**சபரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வாராந்தப் பாடசாலை**

வாரம் - 1

பாடம் - பொதுத் தகவல் தொழில்நுட்பம்

**Prepared By** - M.S.M. Azam (Kg/Mw/ Zahira College- Mawanella)

தரம் - 12

**தேர்ச்சி 1.0** காலத்துக்குரிய பயன்களைப் பெற்றுக் கொள்வதற்காகக் கணினியையும் அதன் உள்ளார்ந்த ஆற்றலையும் ஆராய்தல்.

தேர்ச்சி 1.1 கட்டமைப்பு வரைபடமொன்றைப் பயன்படுத்தி கணினி முறைமையை விபரித்தல்.

## முறைமை (system)

குறித்த குறிக்கோல் ஒன்றினை நிறைவேற்றும் பொருட்டு ஒன்றுடன் ஒன்று இணைந்து தொழிற்படும் பொருட்களின் அல்லது விடயங்களின் தொகுப்பு அல்லது அவற்றுடன் தொடர்புபட்ட விதிமுறைகளின் தொடையே முறைமை ஒன்றாகும். ஒவ்வொரு முறைமையும் உள்ளீடு, முறைவழியாக்கம் மற்றும் வருவிளைவு (IPO) ஆகிய மூன்று பிரதான பாகங்களைக் கொண்ட மாதிரியமொன்றினை (model) கொண்டமைந்ததாகும்.

## கணினி அறிமுகம்

கணினி என்பது குறித்த ஒரு வடிவில் தரவினை பெற்று ஏற்கனவே வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு (செய்நிரலுக்கு) ஏற்ப சில செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் பெறுபேற்றினை தகவல் வடிவில் வெளியிடும் ஆற்றலையுடைய ஒரு இலத்திரணியல் சாதணம் ஆகும்.

## பயிற்சிகள்

1. கணினி ஒன்றின் அடிப்படைப் பாகங்களைப் பெயரிடுக.

2. அவற்றின் தொழிற்பாடுகளை விபரிக்குக.

3. புறச் சாதணங்கள் (peripheral devices) என்றால் என்ன ?